செ.வெ.எண் : 057 நாள் : 26.01.2020

குடியரசு தின விழாவில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து 73 பயனாளிகளுக்கு ரூபாய் 67 இலட்சத்து 36 ஆயிரத்து 739 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

-----------------------------------------------------------------------------------------

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் இன்று (26.01.2020) நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து 73 பயனாளிகளுக்கு ரூபாய் 67 இலட்சத்து 36 ஆயிரத்து 739 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தஞ்சாவூர் ஆயுத படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, வெண்புறா மற்றும் மூவர்ண பலூனினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வானில் பறக்க விட்டு, காவல் துறையின் அணி வகுப்பு மரியாதையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு கைத்தறி ஆடை அணிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கௌரவித்தார்.

பின்னர், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.50,000 மதிப்பிலும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.38,300 மதிப்பிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.13,137 மதிப்பிலும், வருவாய்த்துறை சார்பில் 05 பயனாளிகளுக்கு ரூ.4,50,000 மதிப்பிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் 14 பயனாளிகளுக்கு ரூ.3,77,300 மதிப்பிலும், வேளாண்மைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.42,728 மதிப்பிலும், வேளாண் பொறியியல் துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.15,43,303 மதிப்பிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.9,520 மதிப்பிலும், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 01 பயனாளிக்கு ரூ.2,700 மதிப்பிலும், கூட்டுறவுத் துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.13,50,000 மதிப்பிலும், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ.8,00,000 மதிப்பிலும், சமூக நலத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.2,70,085 மதிப்பிலும், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.2,10,000 மதிப்பிலும், தாட்கோ நிறுவனத்தின் சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.15,78,666 மதிப்பிலும் என மொத்தம் 73 பயனாளிகளுக்கு ரூ. 67 இலட்சத்து 36 ஆயிரத்து 739 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, சிறப்பாக பணியாற்றிய 136 அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும், காவல் துறை அலுவலர்களுக்கு பதக்கங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்.

இறுதியாக, பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளில் ஒரத்தநாடு அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பசுபதிகோயில் தூய கபிரியேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை உள்ளூர் ஆக்ஸ்போர்டு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம் ஏ.ஆர்.ஆர். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் கமலா சுப்ரமணியம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர் குழந்தைகள் நல குழு மாணவர் இல்லம் உள்ளிட்ட பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 342 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு மாணவ மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

குடியரசு தின விழா நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை நீதிபதி திரு.சிவஞானம், தஞ்சாவூர் காவல்துறை துணைத் தலைவர் திரு.லோகநாதன்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.கதிரேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.முத்துமீனாட்சி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வேலுமணி (தஞ்சாவூர்), மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ராமகிருட்டிணன், அனைத்துத் துறை முதன்மை அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.